# மெட்ரோ ரெயில் நிலையங்களில் இண்டர்நெட்-டெலிபோன் வசதி

## பயணிகள் இன்று முதல் பயன்படுத்தலாம்

சென்னை,நவ.8–

சென்னை சென்ட்ரல், எல்.ஐ.சி., ஆயிரம் விளக்கு ஆகிய 3 மெட்ரோ நிலையங்களை தவிர நீலம், பச்சை ஆகிய 2 வழித்தடங்களிலும் 4ஜி டேட்டா, குரல் வழி சேவையை வழங்க ஏர்டெல் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

### லேண்ட்லைன் தொலைபேசி

சென்ட்ரல், ஆயிரம் விளக்கு, எல்.ஐ.சி. நிலையங்களில் டிசம்பர் முதல் வாரத்தில் இந்த வசதி அளிக்கப்படுகிறது.

மெட்ரோ ரெயில் பயணிகளுக்காக 19 சுரங்க மெட்ரோ ரெயில் நிலையங்களில் ஏற்கனவே லேண்ட்லைன் தொலைபேசி அளிக்கப்பட்டுள்ளது. அவசர காலத்தில் இந்த வசதியை இலவசமாக பயன்படுத்தலாம்.

இந்த வசதி பயணிகள் கூடும் இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதுதவிர ஒவ்வொரு நடைமேடைக்கும் 2 எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவசர காலத்தில் மெட்ரோ ரெயில் ஊழியர்களை பயணிகள் எளிதாக தொடர்பு கொள்ள முடியும்.

முன்பு சுரங்க மெட்ரோ ரெயில் நிலையங்களில் இணைய தளம் மற்றும் தொலைபேசி இணைப்பு வசதி கிடைக்காது.

### 'வைபை' சேவை

இப்போது அந்த வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் 'வைபை' சேவையும் இலவசமாக வழங்கப்படுகிறது.

திருமங்கலம், எழும்பூர் ரெயில் நிலையங்களுக்கு இடையே ஜியோ சேவை ஏற்கனவே வழங்கப்பட்டது. ஆனால் நெட்வொர்க் இணைப்பு மோசமாக இருந்ததால் ரெயில் நிலையங்களில் பல இடங்களில் சிக்னல் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் தற்போது இந்த வசதி பயணிகளுக்கு வழங்க மெட்ரோ ரெயில் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது. இன்று முதல் மெட்ரோ ரெயில் பயணத்தின் போது இண்டர் நெட் வசதி, லேண்ட்லைன் டெலிபோன் வசதியை பெறலாம்.